NST Campus

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 08 | நாடகமும் அரங்கியலும் | 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ........................ புள்ளிகள்

## பகுதி - I

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

**01.** தமிழர்களின் மரபுவழி நாடகம் என அழைக்கப்படுவது
1. நாடகம்
2. கூத்து
3. கலை
4. ஊமம்

02. பின்வருவனவற்றுள் நாடக எழுத்துரு ஒன்றின் மூலக்கூறுகளுள் உள்ளடங்காதது
1. கரு
2. கதைப்பின்னல்
3. சொல்லாடல்
4. ஒப்பனை

03. உடல்வழிச் சித்திரிப்பினை வெளிப்படுத்தும் அபிநயம்
1. ஆங்கீக அபிநயம்
2. ஆஹார்ய அபிநயம்
3. சாத்வீக அபிநயம்
4. வாச்சீக அபிநயம்

04. நாடகம் நிகழும் பின்னணி சூழலை எடுத்துக் காட்டுவது
1. வேடவுடை
2. காட்சியமைப்பு
3. முரண்
4. ஒப்பனை

05. பாடசாலை அரங்கின் தோற்றம்.
1. 1960
2. 1980
3.1979
4. 1981

06. ‘அரசனின் புத்தாடை’ எனும் நாடகத்தின் ஆசிரியர்.
1. கா.பாலேந்திரா
2. வேலு சரவணன்
3. கா.சிவத்தம்பி
4. மாவை நித்தியானந்தன்

07. ஒப்பனைப் பொருளாக அமையாதது.
1. பவுடர்
2. உதட்டுச் சாயம்
3. கண்மை
4. நாடக எழுத்துரு

08. நாடகத்தில் பயன்படும் அசைவுகளின் எண்ணிக்கை.
1. 05
2. 03
3. 04
4. 02

09. செம்பினை ஒப்பனை செய்து ஆடப்படும் ஆடல்
1. காவடி
2. கும்மி
3. கரகாட்டம்
4. ஒயிலாட்டம்

10. பின்வருவனவற்றுள் ஊமம் சார்ந்த அரங்க விளையாட்டுக்கு உதாரணமாக அமைவது
1. குருட்டு ஆட்டோ
2. ஆடும் வீடும்
3. கந்தையாண்ணன் சொல்லுறார்
4. கரடியும் கிராம மக்களும்

11. சூழலில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் இசைக்கருவியினை எவ்வாறு அழைப்பர்.
1. தோல் வாத்திய இசைக்கருவி
2. நரம்பு வாத்திய இசைக்கருவி
2. புத்தளிப்பு இசைக்கருவி
4. துளை வாத்திய இசைக்கருவி

12. கூத்தில் இரு பாத்திரங்களுக்கிடையிலான உரையாடலினை எவ்வாறு அழைப்பர்
1. தாளம்
2. மெட்டு
3. தர்க்கதரு
4. ஆடல்

13. பாத்திரம் ஒன்றின் அகப்பண்புகளுள் உள்ளடங்குவது
1. வேடவுடை
2. ஒப்பனை
3. அணிகலன்கள்
4. மகிழ்ச்சி

14. அரங்கவெளி தொடர்பான பிழையான கூற்று
   1. நாடகம் நிகழ்த்தப்படும் இடம்
   2. உயர்த்தப்பட்டதாக மட்டும் இருத்தல் வேண்டும்
   3. நாடகம் நிகழ்த்தப்படவேண்டிய இடம்
   4. கூத்து வட்டக்களரியில் நிகழ்த்தப்படுகின்றது

15. சிறுவர் அரங்கு என்ற எண்ணக்கரு வலிமை பெறுவதற்கு காரணமாக அமைந்த சிறுவர் நாடகம் 1. தப்பி வந்த தாடி ஆடு
   2. கூடி விளையாடு பாப்பா
   3. மலைகளை அகற்றிய மூடக்கிழவன்
   4. வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்

**(15x2=30 புள்ளிகள்)**

**இடைவெளி நிரப்புக.**

**( கோலாட்டம், Drama, வாள், மின்குமிழ், வேடவுடை )**

01. ஆங்கிலத்தில் நாடகத்தை ………………………………………………………….என அழைப்பர்.
02. கைப்பொருளாக……………………………………………………………பயன்படுத்தப்படும்.
03. நாட்டார் கலை வடிவங்களில் ஒன்று ……………………………………. ஆகும்.
04. அரங்கத் துணைக் கலைக்கு உதாரணமாக …………………………… அமையும்.
05. அரங்க ஒளியூட்டலுக்கு …………………………………………………………… பயன்படும்.

(5X2= 10 புள்ளிகள்)

**பகுதி – II**

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

01. 1. நாடக எழுத்துரு என்றால் என்ன? (2 புள்ளிகள்)
   2. நாடக எழுத்துரு ஒன்றின் பௌதிகப் பண்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)
   3. நாடக எழுத்துரு ஒன்றில் உள்ளடங்கும் சித்திரிப்புக்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

02. 1. பாடசாலை அரங்கு என்றால் என்ன? (2 புள்ளிகள்)
   2. பாடசாலை அரங்குடன் தொடர்புடைய ஆளுமையினர் நால்வரைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
   3. பாடசாலை நாடகங்களுக்கு நான்கு உதாரணங்கள் தருக. (4 புள்ளிகள்)

03. 1. நாடகப்பாங்கான கவிதைகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக. (2 புள்ளிகள்)
   2. இக் கவிதைகளை எழுதிய கவிஞரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   3. இக்கவிதைகள் வெளிப்படுத்தும் கருப்பொருள் யாது? (6 புள்ளிகள்)

04. 1. அரங்கப் பயிற்சி என்றால் என்ன? (2 புள்ளிகள்)
   2. நடிகனுக்கு அவசியமான பயிற்சிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   3. அரங்கப் பயிற்சியினால் நடிகன் பெறும் நன்மைகள் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

05. 1. சிறுவர் நாடகம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)
   2. உமக்கு தெரிந்த சிறுவர் நாடகங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)
   3. சிறுவர் அரங்குடன் தொடர்புடைய ஆளுமையினர் நால்வரைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

06. 1. அரசனின் புத்தாடை நாடகம் எத்தனையாம் ஆண்டு எழுதப்பட்டது? (2 புள்ளிகள்)
   2. அரசனின் புத்தாடை எனும் நாடகத்தின் கருப்பொருள் யாது? (3 புள்ளிகள்)
   3. இந் நாடகத்தில் வரும் கதாபாத்திரங்கள் 05 தருக. (5 புள்ளிகள்)

07. 1. நாட்டார் ஆற்றுகைக் கலைகளுக்கு பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
   2. காவடி ஆட்டத்தின் வகைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   3. கரகாட்டம் ஆடும் முறையினை எழுதுக. (4 புள்ளிகள்)